**கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை: செல்வி.A. யுகாதிமரியா, B.Com.L.L.B(Hons.,)**

**கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை.**

**2026ம் ஆண்டு  மார்ச்  திங்கள் 24ம் நாள் செவ்வாய்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.54/2025</u>**

1) ராஜலிங்கம்
2) சிறும்பாயி
3) பாலசுப்பிரமணி
4) ரத்தினவேல்
5) தமிழரசி
6) முனியப்பன் **....வாதிகள்**

**//எதிர்//**

1) பச்சையம்மாள்
2) தமிழக அரசு சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
கரூர் மாவட்டம்.
3) வட்டாட்சியர் ,
வட்டாட்சியர் அலுவலகம், கடவூர் வட்டம்,
கரூர் மாவட்டம். **.......பிரதிவாதிகள்**

இவ்வழக்கு எனது முன்னிலையில் கடந்த 09.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பார்த்திபன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் வருகையில்லாத காரணத்தினால் அவரைத் தோன்றாத் தரப்பினராகக் கருதியும், 2 முதல் 3 வரையான பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.K.S.M.சாகுல் ஹமீது அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று  இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது, வாதிகளால் இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கு வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை செய்திடவும், இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கு வாரிசுகளாக வாதிகளை அறிவித்து அவர்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க சொல்லி 3ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், தோன்றாத்தரப்பினராக இருந்துள்ளார். எனவே, 1ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**வாதிகள் வழக்குரையின் சுருக்கம்:**

3) 1 முதல் 3 வரையான வாதிகள் அனைவரும் வாதிகளின் தந்தையான லேட்.பழனிச்சாமி என்பவரின் முதல் மனைவி மீனாட்சியின் வாரிசுகள் ஆவார்கள். 4 முதல் 6 வரையான வாதிகள் அனைவரும் வாதிகளின் தந்தையான லேட். பழனிச்சாமி என்பவரது இரண்டாவது மனைவியான (1ம் பிரதிவாதி) பச்சையம்மாள் என்பவரின் வாரிசுகள் ஆவார்கள். வாதிகளின் தந்தை பழனிச்சாமி என்பவர் கடந்த 13.04.2023 அன்று இறந்துவிட்டார். 1 முதல் 3 வரையான வாதிகளின் தாயார் மீனாட்சி என்பவர் கடந்த 12.06.2021ம் தேதி அவரது கணவர் பழனிச்சாமி இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார்.

4) வாதிகளின் தந்தையான இறந்து போன பழனிச்சாமி என்பவர் கடந்த 1960ம் ஆண்டு, 1 முதல் 3 வரையான வாதிகளின் தாயாரான மீனாட்சி என்பவரை திருமணம் செய்துள்ளார். மேற்படி பழனிச்சாமி மற்றும் மீனாட்சி தம்பதியினருக்கு 1ம் வாதி ராஜலிங்கம் 1வது மகனாகவும், 2ம் வாதி சிறும்பாயி 2வது மகளாகவும், 3ம் வாதி பாலசுப்பிரமணி 3வது மகனாகவும் பிறந்துள்ளனர்.

5) பின்னிட்டு, மேற்படி பழனிச்சாமி என்பவர் அவரது முதல் மனைவியான மீனாட்சி என்பவர் உயிருடன் இருக்கும்போதே மீனாட்சியின் சகோதரியும், 1ம் பிரதிவாதியுமான பச்சையம்மாள் என்பவரை கடந்த 1969ம் ஆண்டு திருமணம் செய்துள்ளார். அவ்வாறு பழனியம்மாள் என்பவருக்கும் 1ம் பிரதிவாதியான பச்சையம்மாள் என்பவருக்கும் 4ம் வாதியான ரத்தினவேல் முதல் மகனாகவும், 5ம் வாதியான தமிழரசி இரண்டாவது மகளாகவும், 6ம் வாதியான முனியப்பன் மூன்றாவது மகனாகவும் பிறந்துள்ளனர்.

6) மேற்படி பழனிச்சாமி, கடந்த 1969ம் ஆண்டு அவரது முதல் மனைவியான மீனாட்சி உயிருடன் இருக்கும்போதே அவரது சகோதரியும், 1ம் பிரதிவாதியுமான பச்சையம்மாள் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார், அவர் மேற்படி பழனிச்சாமி என்பவருக்கு சட்டப்படியான வாரிசாக வரமாட்டார். இந்நிலையில், 3ம் வாதியான பாலசுப்ரமணி என்பவர் ஏனைய வாதிகளுடன் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து இறந்துபோன மேற்படி பழனிச்சாமி என்பவருக்கு வாரிசாக அறிவிக்க கோரி, கடந்த 18.10.2024ம் தேதி 3ம் பிரதிவாதி வசம் இணையதளம் வழியாக மனு கொடுத்துள்ளார். அவ்வாறு 3ம் வாதி தாக்கல் செய்த மனுவானது மேற்படி பழனிச்சாமி என்பவருக்கு இரண்டு மனைவிகள் இருந்ததால், 3ம் பிரதிவாதியால் கடந்த 21.10.2024ம் தேதி நிராகரிக்கப்பட்டுள்ளது.

7) உண்மையில், இறந்துபோன பழனிச்சாமி என்பவருக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். மேற்படி பழனிச்சாமி என்பவருக்கு உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை. மேற்படி பழனிச்சாமி என்பவரின் பெற்றோரும், மேற்படி பழனிச்சாமி இறப்பதற்கு பல வருடங்களுக்கு முன்பாகவே இறந்துவிட்டனர். 1ம் பிரதிவாதியை, தனது மனைவி உயிருடன் இருக்கும்போதே மேற்படி பழனிச்சாமி திருமணம் செய்த காரணத்தினால், அவர் மேற்படி பழனிச்சாமி என்பவருக்கு சட்டப்படியான வாரிசு இல்லை. அது வாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதை தவிர்த்து, 1ம் பிரதிவாதியும் மேற்படி பழனிச்சாமி என்பவரின் 2ம்

மனைவியான பச்சையம்மாள் என்பவரின் வாரிசுகளான 4 முதல் 6 வரையான வாதிகளை மேற்படி பழனிச்சாமி என்பவருக்கு வாரிசுகளாக அறிவிக்க 1 முதல் 3 வரையான வாதிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே, 1ம் பிரதிவாதியை திருமணம் செய்துகொண்ட காரணத்தினால், 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் அவசியத்தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். இறந்துபோன பழனிச்சாமி என்பவருக்கு, வாதிகளை தவிர வேறு எந்த வாரிசுகளும் கிடையாது. இறந்து போன பழனிச்சாமி என்பவர் பெயரில் உள்ள வருவாய்துறை ஆவணங்களில் சொத்துகளை உரிமை மாற்றம் செய்யவும் மற்றும் பிற காரணங்களுக்காகவும் வாரிசு சான்றிதழ் பெற வேண்டியது அவசியமாகிறது. எனவே, இவ்வழக்கானது வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

**8)** வாதிகளின் தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல. வாதிகளுக்கு தாவாவில் கண்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. இந்த பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை இந்த வாதியே நிரூபிக்க வேண்டும். தாவா 3 முதல் 10 வரையிலுள்ள பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதிகள் நிரூபிக்க தலையாய கடமைப்பட்டவர்கள். தாவா 3 முதல் 6ம் பத்தியில் லேட்.பழனிச்சாமி, மீனாட்சி என்பவரை திருமணம் செய்துள்ளார் என்று சொல்வதும், அவர்களின் திருமணத்தின் வாயிலாக 1 முதல் 3 வரையான வாதிகள் பிறந்துள்ளார்கள் என்று சொல்வதும், மேலும் மேற்படி பழனிச்சாமி முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே இரண்டாவதாக 1ம் பிரதிவாதியான பச்சையம்மாளை திருமணம் செய்து, மேற்படி திருமணத்தின் பயனாக 4 முதல் 6 வரையான வாதிகள் பிறந்துள்ளார்கள் என்று சொல்வதும் வாதிகளே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

9) மேற்படி, வழக்குரையில் சொல்லியுள்ள அனைத்து சங்கதிகளும் வாதிகளே நிரூபிக்க தலையாய கடமைப்பட்டவர்கள். வழக்குரை பத்தி எண்.7 ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதிகளே நிரூபணம் செய்யவேண்டும். பத்தி எண்.8 முதல் 10 வரை சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் வாதிகளே சட்டப்படி நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். மேற்படி இறந்து போன பழனிச்சாமி பெயரில் உள்ள சொத்துக்களை வாதிகள் பெயரில் பெயர் மாற்றம் செய்ய வேண்டியதால், வாரிசு சான்றிதழ் தேவைப்படுகிறது என்று சொல்வதும் வாதிகளே நிரூபிக்க வேண்டும். இந்த பிரதிவாதிகள் அரசு அதிகாரிகள் என்பதால், உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 80ன்படி, முன் அறிவிப்பு எதுவும் அனுப்பாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியதாகும். இவ்வழக்கில் வழக்குமூலமும் கிடையாது. வழக்கில் சொல்லப்பட்டிருக்கும் சங்கதிகள் அனைத்தும் வாதிகளே நிரூபிக்கக் கடமைப்பட்டவர்கள். வழக்கில் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை. எனவே, இவ்வழக்கானது இந்த பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>எழுவினாக்கள்:</u>**

10) இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது:

| | |
|---|---|
| 1 | Whether the Plaintiffs are the sons of Late. Palanisamy as alleged by them? |
| 2 | Whether the Plaintiffs are entitled to the relief of declaration of their legal status as prayed for? |
| 3 | Whether the Plaintiffs are entitled to the relief of Mandatory Injunction against the 3rd Defendant as prayed for? |
| 4 | To what other reliefs? |

**சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:**

**11)** வாதி தரப்பில் 3ம் வாதியாகிய பாலசுப்ரமணி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து, வாதிகள் தரப்பில் ஒரு ரத்தினசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.12 ஆவணம் குறியீடு செய்யப்பட்டள்ளது. வாதிகள் தரப்பு சாட்சிமானது வா.சா.2 உடன் முடித்து வைக்கப்பட்டது. 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் முன்னிறுத்தப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**தீர்வு:**

**எழுவினா எண்.1 மற்றும் 2:**

**12)** இவ்வழக்கானது, வாதிகளால் இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கு வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை செய்ய விளம்புகை பரிகாரத்திற்காகவும், மேலும் இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கு வாதிகளை வாரிசுகளாக காண்பித்து வாரிசு சான்றிதழ் வழங்க 3ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகளின் தந்தையாகிய லேட்.பழனிச்சாமி என்பவருக்கும், அவரது முதல் மனைவியாகிய மீனாட்சி என்பவருக்கும் 1 முதல் 3 வரையான வாதிகள் வாரிசுகள் என்றும், மேற்படி பழனிச்சாமியின் முதல் மனைவி மீனாட்சி உயிருடன் இருந்த சமயத்திலே, மேற்சொன்ன மீனாட்சியின் சகோதரியாகிய 1ம் பிரதிவாதியாகிய பச்சையம்மாளை லேட்.பழனிச்சாமி என்பவர் இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றும், மேற்படி பழனிச்சாமி மற்றும் 1ம் பிரதிவாதி பச்சையம்மாளுக்கு பிறந்தவர்கள் 4 முதல் 6 வரையான வாதிகள் என்றும், வாதிகளின் தந்தை பழனிச்சாமி கடந்த 13.04.2023ம் தேதி

இறந்துவிட்டார் என்றும், 1 முதல் 3 வரையான வாதிகளின் தாயாராகிய மீனாட்சி என்பவர், கடந்த 12.06.2021ம் தேதி அவரது கணவர் பழனிச்சாமி இறப்பதற்கு முன்பாகவே இறந்துவிட்டார் என்றும், 1 முதல் 6 வரையான வாதிகள் மட்டுமே இறந்துபோன லேட்.பழனிச்சாமி என்பவருக்கு சட்டப்படியான வாரிசுகள் என்றும் கூறி, இவ்வழக்கானது வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**13)** மேற்படி, சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொருட்டு வாதிகள் தரப்பில் 3ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வா.சா.ஆ.1 ஆவணமானது, 3ம் வாதியாகிய பாலசுப்ரமணி என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் ஆகும். வா.சா.ஆ.1 ஆவணமானது, அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 யைப் பரிசீலனை செய்கையில், மேற்படி பாலசுப்ரமணி என்பவரது தந்தை பெயர் பழனிச்சாமி என்றும், மேற்படி பாலசுப்ரமணி என்பவர் கதவு எண்.5/10, பிச்சம்பட்டி, மஞ்சாநாயக்கன்பட்டி, கரூர் என்ற முகவரியில் வசித்து வருவதாக மேற்படி அவரது ஆதார் அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.2 ஆவணமானது, 2ம் வாதியாகிய சிறும்பாயி என்பவரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் ஆகும். வா.சா.ஆ.2 ஆவணமானது, அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 யைப் பரிசீலனை செய்கையில், மேற்படி சிறும்பாயி என்பவரது தந்தை பெயர் பழனிச்சாமி என்றும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**14)** வா.சா.ஆ.3 ஆவணமானது, 4ம் வாதியாகிய ரத்தினவேல் என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் ஆகும். வா.சா.ஆ.3 ஆவணமானது, அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்தால் குறியீடு

செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 யைப் பரிசீலனை செய்கையில், மேற்படி ரத்தினவேல் என்பவரது தந்தை பெயர் பழனிச்சாமி என்றும், மேற்படி ரத்தினவேல் என்பவர் கதவு எண்.5/11, பிச்சம்பட்டி, மஞ்சாநாயக்கன்பட்டி, கரூர் என்ற முகவரியில் வசித்து வருவதாக மேற்படி அவரது ஆதார் அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**15)** வா.சா.ஆ.4 ஆவணமானது, 5ம் வாதியாகிய தமிழரசி என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் ஆகும். வா.சா.ஆ.4 ஆவணமானது, அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 யைப் பரிசீலனை செய்கையில், 5ம் வாதி தமிழரசியின் கணவர் பெயர் ரத்தினசாமி என்றும் குறிப்பிட்டு, மேற்படி ஆதார் அடையாள அட்டையானது 5ம் வாதி பெயரில் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. வா.சா.ஆ.5 ஆவணமானது, 6ம் வாதியாகிய முனியப்பன் என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் ஆகும். வா.சா.ஆ.5 ஆவணமானது, அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 யைப் பரிசீலனை செய்கையில், 6ம் வாதியின் தந்தை பெயர் பழனிச்சாமி என்றும், 6ம் வாதி கதவு எண்.5/101, பிச்சம்பட்டி, மஞ்சாநாயக்கன்பட்டி, கரூர் என்ற முகவரியில் வசித்து வருவதாக காண்பித்து, மேற்படி ஆதார் அடையாள அட்டையானது காண்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

**16)** வா.சா.ஆ.6 ஆவணமானது, 1ம் வாதியாகிய ராஜலிங்கம் என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் ஆகும். மேற்படி, வா.சா.ஆ.6 ஆவணமானது, அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு, பின்பு இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 யைப் பரிசீலனை செய்கையில், 1ம் வாதியின் தந்தை பெயர் பழனிச்சாமி என்றும், 1ம் வாதி வில்ப்பட்டி, திண்டுக்கல் என்ற

முகவரியில் வசித்து வருவதாக காண்பிக்கப்பட்டு, மேற்படி ஆதார் அடையாள அட்டையில் உள்ளது என்பது அறிய முடிகின்றது.

**17)** வா.சா.ஆ.7 ஆவணமானது, வா.சா.1 ஆகிய 3ம் வாதியால் கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட சுயஉறுதிமொழி விண்ணபத்தின் பதிவிறக்க நகலாகும். மேற்படி, சுயஉறுதிமொழி விண்ணபத்தை பரிசீலனை செய்கையில், 3ம் வாதியான பாலசுப்ரமணி அவரது தந்தை பெயர் பழனிச்சாமி என்றும், 3ம் வாதி கதவு எண்.5/10, பிச்சம்பட்டி, மஞ்சாநாயக்கன்பட்டி, கடவூர் வட்டம் கரூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், அவரது தந்தையாகிய பழனிச்சாமிக்கு 1 முதல் 3 வரையான வாதிகள் 1ம் மனைவியின் மகன் மற்றும் மகள்கள் என்றும், 4 முதல் 6 வரையான வாதிகள் 2ம் மனைவியின் மூலம் பிறந்த மகன்கள் மற்றும் மகள் என்றும், காளியப்பன் இறந்து போன பழனிச்சாமியின் தந்தை என்றும், அரியம்மாள் என்பவர் இறந்துபோன பழனிச்சாமியின் தாயார் என்றும், மீனாட்சி என்பவர் இறந்து போன பழனிச்சாமியின் முதல் மனைவி என்றும், பச்சையம்மாள் என்ற 1ம் பிரதிவாதி இறந்துபோன பழனிச்சாமியின் 2வது மனைவி என்றும் குறிப்பிட்டு, மேற்படி சுயஉறுதிமொழி விண்ணபமானது 3ம் வாதியால் கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.8 ஆவணமானது, மேற்படி இறந்து போன பழனிச்சாமி குடும்பத்தின் வம்சாவழி பட்டியல் ஆவணம் ஆகும். மேற்படி வா.சா.ஆ.8 யைப் பரிசீலனை செய்கையில், வாதிகள் வழக்குரையில் தங்களுக்கும் மேற்படி இறந்துபோன பழனிச்சாமிக்கும் 1ம் பிரதிவாதி ஆகியோர்க்கும் உள்ள உறவு முறைகள் குறித்து மேற்படி வம்சாவழி பட்டியல் காண்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

**18)** வா.சா.ஆ.9 ஆவணமானது, கடந்த 21.10.2024ம் தேதியில் வருவாய் துறையினரால், கடந்த 18.10.2024ம் தேதியிட்ட 3ம் வாதியாகிய பாலசுப்ரமணி

என்பவர் தமிழக அரசின் இணையவழி சேவை மூலம் இறந்து போன பழனிச்சாமி என்பவரது வாரிசு சான்றிதழ் வேண்டி இணைய வழி மூலம் அளித்த விண்ணப்பத்தினை இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியால் நிராகரிக்கப்பட்டதற்கான ரசீதின் கணினி பதிவிறக்க நகல் ஆகும். மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தைப் பரிசீலனை செய்கையில், 3ம் வாதி பாலசுப்ரமணி தனது தந்தையாகிய பழனிச்சாமி என்பவரது வாரிசு சான்றிதழ் வேண்டி வருவாய் துறையினரிடம் இணையவழி மூலம் கடந்த 18.10.2024 அன்று விண்ணப்பம் செய்துள்ளார் என்றும், மேற்படி விண்ணப்பத்தின் அடிப்படையில், கிராம நிர்வாக அலுவலர் விசாரணை செய்ததில், இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கு இரண்டு மனைவிகள் உள்ள காரணத்தினால், மேற்படி விண்ணப்பமானது நிராகரிக்கப்பட்டுவிட்டது என்று கூறி, வருவாய்துறையினரால் மேற்படி படிவமானது நிராகரிக்கப்பட்டுள்ளதாக கூறி மேற்படி இணையவழி சேவை மூலம் வாதிகளுக்கு தெரிவிக்கப்பட்டதற்கான இணையவழி பதிவிறக்க ரசீது நகல் என்பதை அறிய முடிகின்றது.

**19)** வா.சா.ஆ.10 ஆவணமானது, கடந்த 11.05.2023 தேதியிட்ட இறந்து போன பழனிச்சாமி என்பவரது இறப்பு சான்றிதழின் அசல் ஆகும். வா.சா.ஆ.10 இறப்பு சான்றிதழைப் பரிசீலனை செய்கையில், பழனிச்சாமி என்பவர் கடந்த 13.04.2023 அன்று பிச்சம்பட்டி, மஞ்சாநாயக்கன்பட்டி, கடவூர் வட்டம், கரூர் மாவட்டம் என்ற முகவரியில் இறந்து விட்டதாக மேற்படி அவரது இறப்பானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. வா.சா.ஆ.11 ஆவணமானது, கடந்த 21.07.2021 தேதியிட்ட மீனாட்சி என்பவரது இறப்பு சான்றிதழின் பதிவிறக்க நகல் ஆகும். மேற்படி மீனாட்சி என்பவரது இறப்பு சான்றிதழைப் பரிசீலனை செய்கையில், மேற்படி மீனாட்சியின் கணவர் பெயர் பழனிச்சாமி என்றும், மேற்சொன்ன மீனாட்சி என்பவர் கடந்த 12.06.2021 அன்று பிச்சம்பட்டி, மஞ்சாநாயக்கன்பட்டி, கடவூர் வட்டம், கரூர் மாவட்டம் என்ற முகவரியில் இறந்து

விட்டதாக கூறி மேற்படி அவரது இறப்பானது பதிவு செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

**20)** வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்கு மூலத்தில் வாதிகளின் வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், பழனிச்சாமி என்பவர் தனது தந்தை என்றும், தனது தாயார் பெயர் மீனாட்சி என்றும், சுமார் 70 அல்லது 80 வருடங்களுக்கு முன்பு தனது தந்தையாகிய பழனிச்சாமிக்கும், தனது தாயாராகிய மீனாட்சிக்கும் திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி பழனிச்சாமி மற்றும் மீனாட்சிக்கு 1 முதல் 3 வரையான வாதிகள் வாரிசுகள் என்றும், தனது தாயாராகிய மீனாட்சி சுமார் 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தனது பள்ளி மாற்றுச் சான்றிதழ் நெருப்பில் எரிந்து விட்டதால் தாக்கல் செய்யவில்லை என்றும், தனது பிறப்பு சான்றிதழையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், குடும்ப அட்டை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், தனது தாயார் மீனாட்சி உயிருடன் இருக்கும்போது இரண்டாவதாக பச்சையம்மாளை திருமணம் செய்ததால், பச்சையம்மாள் தனது தந்தையின் சட்டப்படியான மனைவி இல்லை என்றும், பச்சையம்மாளின் பெற்றோர்கள் தற்சமயம் உயிருடன் இல்லை என்றும், பழனிச்சாமியின் தந்தை பெயர் காளியப்பன், அவரது தாயார் பெயர் அரியம்மாள் என்றும், மேற்படி பழனிச்சாமிக்கும் அவரது 2ம் மனைவியாகிய பச்சையம்மாளுக்கும் 4 முதல் 6 வரையான வாதிகள் வாரிசுகள் என்றும் குறிப்பிட்டு கூறியுள்ளார். வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், வாதிகளுக்கும் மேற்படி இறந்து போன பழனிச்சாமிக்கும் உள்ள உறவுமுறை குறித்து எவ்வகையிலும் முரண்படாமல் உறுதியூட்டி சாட்சியம் அளித்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**21)** வா.சா.1யைத் தொடர்ந்து, வாதிகள் தரப்பில் ஒரு ரத்தினசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவரது ஆதார் அடையாள அட்டையின்

நகலானது அதன் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு பின்பு இந்நீதிமன்றத்தால் வா.சா.ஆ.12 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.12 யைப் பரிசீலனை செய்கையில், ரத்தினசாமி என்பவர் கதவு எண்.4/183, ஜெகதாபி, கரூர் என்ற முகவரியில் வசித்து வருவதாக தெரிகிறது. வா.சா.ஆ.12 ஆவணத்தின் மூலம், வா.சா.2 ன் அடையாளமானது இந்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. வா.சா.2 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதிகளின் வழக்கை ஒத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க தனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றும், 3 ம் வாதி பாலசுப்ரமணி அழைத்ததன் பேரில், சாட்சியம் அளிக்க வந்துள்ளதாகவும், பழனிச்சாமி மற்றும் அவரது மனைவிகளான மீனாட்சி மற்றும் பச்சையம்மாள் ஆகியோரின் திருமணம் பற்றிய விவரம் தனக்கு நேரிடையாக தெரியாது என்றும், ஆனால் மேற்படி பழனிச்சாமிக்கு 6 குழந்தைகள் என்றும், வாதிகளுக்கு தான் உறவினர் இல்லை என்றும் குறிப்பிட்டு தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். வாதிகள் தரப்பு சாட்சியானது, வா.சா.2 உடன் முடித்து வைக்கப்பட்டது. மாறாக, பிரதிவாதிகள் தரப்பில் 1 ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக இவ்வழக்கில் இருந்துள்ளார். 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிறுத்தப்படவில்லை. எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

**22)** வழக்கு கோப்புகளை கவனமுடன் பரிசீலனை செய்ததில், வா.சா.ஆ.10 மேற்படி இறந்து போன பழனிச்சாமியின் இறப்பு சான்றிதழின் மூலம் மேற்படி பழனிச்சாமி என்பவர் கடந்த 13.04.2023 அன்று இறந்துவிட்டார் என்ற சங்கதியைப் பொறுத்து வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், மேற்படி பழனிச்சாமி என்பவரது முதல்

மனைவியாகிய மீனாட்சி என்பவர், கடந்த 12.06.2021 அன்று மேற்படி பழனிச்சாமி இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்று வா.சா.ஆ.11 மீனாட்சியின் இறப்பு சான்றிதழ் வழியாக வாதிகள் மேற்படி மீனாட்சியின் இறப்பை நிரூபணம் செய்து விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும், வாதிகள் தரப்பில் 3ம் வாதியாகிய வா.சா.1 தனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் தனது குறுக்கு விசாரணையிலும் இறந்து போன பழனிச்சாமி என்பவரது முதல் மனைவியாகிய மீனாட்சி என்பவருக்கு 1 முதல் 3 வரையான வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்றும், மேலும் மேற்படி மீனாட்சி உயிருடன் இருந்த சமயத்திலே அவருடைய சகோதரியாகிய பச்சையம்மாளை பழனிச்சாமி என்பவர் 2ம் மனைவியாக திருமணம் செய்து கொண்டு அவர்களுக்கு 4 முதல் 6 வரையான வாதிகள் வாரிசுகள் என்றும், எவ்வகையிலும் முரண்படாமல் வாதிகள் வழக்கை உறுதியூட்டி சாட்சியம் அளித்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

**23)** மேலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆதார் அடையாள அட்டைகள் மற்றும் இதர ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்ததிலும், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் மேற்படி இறந்து போன பழனிச்சாமி என்பவரை வாதிகளின் தந்தையாக காண்பிக்கப்பட்டு வாதிகளுக்கு ஆதரவாக பெறப்பட்டுள்ள ஆவணங்கள் என்பதை அறிய முடிகின்றது.

**24)** மறுபுறம், மேற்படி சங்கதிகளை மறுக்கவோ, அல்லது மறுதளிக்கவோ 1ம் பிரதிவாதி மேற்படி அசல் வழக்கை எதிர்கொண்டு மேல் நடத்த தவறியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது. 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் அழைப்பாணை பெற்றுக்கொண்டும் இந்நீதிமன்றத்தில் தோன்றாத்தரப்பினராக இருந்துள்ளதால், அவருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி வாதிகள் இறந்து போன

பழனிச்சாமியின் மகன் மற்றும் மகள்கள் என்பதை மறுக்கவும் மறுதளிக்கவும் எவ்விதமான வாய்மொழி சாட்சியங்களும் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பில் எவ்வகையில் ஆட்சேபனை செய்யப்படவில்லை என்பதை அறிய முடிகின்றது. எனவே, 1 முதல் 6 வரையான வாதிகளின் தந்தைதான் இறந்து போன பழனிச்சாமி என்ற சங்கதிகளை வாதிகள் தரப்பில் தகுந்த வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, எழுவினா எண்.1 ஆனது வாதிகளுக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

**25)** இந்நிலையில், இந்து வாரிசுரிமைச் சட்டம் பிரிவு 8 யைப் பரிசீலனை செய்கையில், இறந்து போன ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த ஒரு ஆண் நபர் தனது சொத்துக்களைப் பொறுத்து எவ்வித விருப்புறுதி மற்றும் உயில் ஆவணங்கள் எழுதி வைக்காமல் இறந்துள்ள நிலையில், அவரது சொத்துக்களானது முதலில் மேற்படி சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள முதல் நிலை வாரிசுகளுக்கு பிரியும் என்றும், அவ்வாறு முதல் நிலை வாரிசுகள் யாரும் இல்லாத பட்சத்தில், மேற்படி அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள 2 ம் நிலை வாரிசுதாரர்களுக்கு அவரது சொத்துக்கள் பிரியும் என்றும், அவ்வாறு 1 மற்றும் 2 ம் நிலை வாரிசுதாரர்கள் யாரும் இல்லாத பட்சத்தில், மற்ற நபர்களுக்கு பிரியும் என்றும் மேற்படி சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்து. இந்நிலையில், மேற்படி சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைப் பரிசீலனை செய்கையில், முதல்நிலை வாரிசுகள் விவரத்தில் மகன் மற்றும் மகள்கள் இறந்து போன இந்து ஆண் நபருக்கு வாரிசுகளாக காண்பிக்கப்பட்டு, மேற்படி அட்டவணை வரையறுக்கப்பட்டுள்ளது.

**26)** இந்நிலையில், 1 முதல் 3 வரையான வாதிகள் இறந்து போன பழனிச்சாமியின் முதல் மனைவியாகிய மீனாட்சி என்பவருக்கு பிறந்தவர்கள் என்பதையும், 4 முதல் 6 வரையான வாதிகள் இறந்து போன பழனிச்சாமி மற்றும் அவரது இரண்டாம் மனைவியான 1ம் பிரதிவாதி பச்சையம்மாளுக்கு பிறந்த வாரிசுகள் என்றும் வாதிகளால் இவ்வழக்கில் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில், 4 முதல் 6 வரையான வாதிகள் இறந்து போன பழனிச்சாமியின் 2ம் மனைவிக்கு பிறந்த மகள் மற்றும் மகன்களாக இருப்பினும், மேற்படி நபர்களுக்கும் இந்து வாரிசுரிமை சட்டம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள முதல் நிலை வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில், அவர்களும் இறந்து போன பழனிச்சாமியின் மகள் மற்றும் மகன்கள் என்ற அடிப்படையில், வாரிசுதாரர்களாகவே சட்டத்தின் பார்வையில் கருதப்படுவார்கள் என்று மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பல வழக்குகளில் மேற்கோள் காட்டியுள்ளதை கருத்திற்கொண்டு அவற்றை இவ்வழக்கிற்கு பொருத்தி இந்நீதிமன்றம் 1 முதல் 6 வரையான வாதிகள் மட்டுமே, இறந்து போன லேட்.பழனிச்சாமியின் சட்டப்படியான வாரிசுகள் என்று கருதுகின்றது.

**27)** இறந்து போன பழனிச்சாமியின் 2ம் மனைவியான 1ம் பிரதிவாதி பச்சையம்மாளின் வாரிசுகள் 4 முதல் 6 வரையான வாதிகளாக இருப்பினும், 1 முதல் 3 வரையான வாதிகளாகிய இறந்து போன பழனிச்சாமியின் 1ம் மனைவியான மீனாட்சி என்பவருக்கு பிறந்த வாரிசுகளுக்கு இணையான அந்தஸ்தினை 4 முதல் 6 வரையான வாதிகளும் பெறுவார்கள் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும், இறந்து போன பழனிச்சாமி என்பவரது முதல் மனைவி மீனாட்சி உயிருடன் இருந்த சமயத்திலே மேற்கண்ட மீனாட்சியின் சகோதரியாகிய 1ம் பிரதிவாதி பச்சையம்மாளை இறந்து போன

பழனிச்சாமி என்பவர் இரண்டாவதாக திருமணம் செய்துள்ளார் என்ற சங்கதிகள் வாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

**28)** எனவே, 1ம் மனைவி மீனாட்சி உயிருடன் இருக்கும் சமயத்தில் பழனிச்சாமி 1ம் பிரதிவாதி பச்சையம்மாளை இரண்டாவதாக திருமணம் செய்துள்ளதால், மேற்படி 1ம் பிரதிவாதியான பச்சையம்மாளை இறந்து போன பழனிச்சாமியின் சட்டப்படியான வாரிசாக கருதமுடியாது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. இருப்பினும், மேற்படி இறந்து போன பழனிச்சாமிக்கும், 1ம் பிரதிவாதியான பச்சையம்மாளுக்கும் பிறந்த குழந்தைகளான 4 முதல் 6 வரையான வாதிகள் 1 முதல் 3 வரையான வாதிகளுக்கு இணையான அந்தஸ்தினை பெறுவார்கள் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. எனவே, 1 முதல் 6 வரையான வாதிகள் இறந்து போன பழனிச்சாமியின் மகன்கள் மற்றும் மகள்கள் என்பதை வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்துள்ள நிலையில், வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரமானது வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. எனவே, எழுவினா எண்.2ம் வாதிகளுக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>எழுவினா எண்.3:</u>**

**29)** இந்நிலையில், 3ம் வாதி 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளான வருவாய் துறையினரிடம் இறந்து போன பழனிச்சாமியின் வாரிசு சான்றிதழ் வேண்டி, கடந்த 18.10.2024ம் தேதி இணைய வழியில் விண்ணப்பம் செய்ததாகவும், மேற்படி இறந்து போன பழனிச்சாமிக்கு 2 மனைவிகள் உள்ளதால், மேற்படி விண்ணப்பமானது கடந்த 21.10.2024 அன்று 3ம் பிரதிவாதியால் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்றும் கூறி, 3ம் பிரதிவாதிக்கு எதிராக இறந்து போன பழனிச்சாமிக்கு வாதிகளே வாரிசாக காண்பித்து வாரிசு சான்றிதழ் வழங்கிட செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வேண்டியும் வாதியால்

இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில், மேற்படி 3ம் பிரதிவாதியால் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் கணினி பதிவிறக்க நகலானது, வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தின் மூலம், 3ம் பிரதிவாதியால் இறந்து போன பழனிச்சாமிக்கு இரண்டு மனைவிகள் உள்ள காரணத்தினால் 3ம் வாதி கடந்த 18.10.2024 அன்று தாக்கல் செய்துள்ள விண்ணப்பமானது பிரதிவாதிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்ற சங்கதிகளை வா.சா.ஆ.9 ஆவணத்தின் மூலம் வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**30)** அவ்வாறு இருக்கும் நிலையில், 1 முதல் 6 வரையான வாதிகளே இறந்து போன பழனிச்சாமியின் சட்டப்படியான வாரிசுகள் என்று இந்நீதிமன்றம் மேற்கண்ட எழுவினாவில் தீர்வு கண்டுள்ள நிலையில், 1 முதல் 6 வரையான வாதிகள் இறந்து போன பழனிச்சாமிக்கு சட்டப்படியான வாரிசுகள் என்ற அடிப்படையில், வாரிசு சான்றிதழ் பெறுவதற்கு அனைத்து வகையிலும் தகுதியுடையவர்கள் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, வாதிகள் 3ம் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ள செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் பெற அனைத்து வகையிலும் உரிமையுடையவர்கள் மற்றும் தகுதியுடையவர்கள் என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே, மேற்படி எழுவினா எண்.3ம் வாதிகளுக்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**எழுவினா எண்.4:**

**31)** மேற்கண்ட அனைத்து எழுவினாக்களுக்கும் இந்நீதிமன்றத்தால் தீர்வு கண்டுள்ள நிலையில், வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் வேறு எதுவும் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

<u>முடிவு:</u>

முடிவாக, மேற்சொன்ன காரணங்களுக்காக இவ்வழக்கானது பின்வரும் பரிகாரங்களுக்காக வாதிகள் கோரியுள்ளபடி அனுமதிக்கப்படுகின்றது:

**1)** 1 முதல் 6 வரையான வாதிகள் மட்டுமே இறந்து போன பழனிச்சாமி என்பவரது சட்டப்படியான வாரிசுகள் என்று இந்நீதிமன்றம் விளம்புகை செய்து உத்தரவிடுகின்றது.

**2)** இறந்து போன பழனிச்சாமி என்பவருக்கு, 1 முதல் 6 வரையான வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்று வாரிசு சான்றிதழ் வழங்கிட 3ம் பிரதிவாதிக்கு செயலுறுத்துக் கட்டளை உத்தரவானது பிறப்பிக்கப்படுகின்றது.

**3)** செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பு எடுக்கப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாளாகிய இன்று அவையறிய பகிரப்பட்டது.

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.24 17:45:01 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**

<u>வாதி தரப்பு சாட்சி:</u>

**வா.சா.1** –பாலசுப்பிரமணி (3ம் வாதி)

**வா.சா.2** –ரத்தினசாமி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.1** | – | 3ம் வாதியாகிய பாலசுப்ரமணி என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் |
| **வா.சா.ஆ.2** | – | 2ம் வாதியாகிய சிறும்பாயி என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் |

| | | |
|---|---|---|
| **வா.சா.ஆ.3** | – | 4ம் வாதியாகிய ரத்தினவேல் என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் |
| **வா.சா.ஆ.4** | – | 5ம் வாதியாகிய தமிழரசி என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் |
| **வா.சா.ஆ.5** | – | 6ம் வாதியாகிய முனியப்பன் என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் |
| **வா.சா.ஆ.6** | – | 1ம் வாதியாகிய ராஜலிங்கம் என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் |
| **வா.சா.ஆ.7** | – | வா.சா.1 ஆகிய 3ம் வாதியால் கடவூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட சுயஉறுதிமொழி விண்ணப்பத்தின் பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.8** | – | இறந்து போன பழனிச்சாமி குடும்பத்தின் வம்சாவழி பட்டியல் ஆவணம் |
| **வா.சா.ஆ.9** | 18.10.2024 | வாரிசு சான்றிதழ் வேண்டி இணைய வழி மூலம் அளித்த விண்ணப்பத்தினை இவ்வழக்கின் 3ம் பிரதிவாதியால் நிராகரிக்கப்பட்டதற்கான ரசீதின் கணினி பதிவிறக்க நகல் ஆகும். |
| **வா.சா.ஆ.10** | 11.05.2023 | இறந்து போன பழனிச்சாமி என்பவரது இறப்பு சான்றிதழின் அசல் |
| **வா.சா.ஆ.11** | 21.07.2021 | மீனாட்சி என்பவரது இறப்பு சான்றிதழின் பதிவிறக்க நகல் |
| **வா.சா.ஆ.12** | – | ரத்தினசாமி என்பவரது ஆதார் அடையாள அட்டையின் நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.**

YUGHATHY MARIYA

Digitally signed by YUGHATHY MARIYA
Date: 2026.03.24 17:45:08 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**